**செய்தி வெளியீடு எண்: 273** **நாள்: 20.04.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (20.4.2018) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம் – காசிபாளையத்தில் 13 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 1109 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 44 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம் – காசிபாளையத்தில் 13 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – சின்மயா நகரில் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையம்; கோயம்புத்தூர் மாவட்டம் – சமத்தூரில் 110/22 கி.வோ துணை மின் நிலையம், பாப்பநாயக்கன் பாளையம் மற்றும் M.G புதூர் ஆகிய இடங்களில் 110/11 கி.வோ துணை மின் நிலையங்கள், இரும்பொறையில் 110/33 கி.வோ துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்), கருமத்தம்பட்டி மற்றும் வடவள்ளி ஆகிய இடங்களில் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்; கடலூர் மாவட்டம் – கொட்டாரம் மற்றும் மதுராந்தக நல்லூர் ஆகிய இடங்களில் 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்; திண்டுக்கல் மாவட்டம் –

லட்சுமணபட்டியில் 110/33 – 22 கி.வோ. துணை மின் நிலையம்; தருமபுரி மாவட்டம் – தருமபுரியில் 110/33 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்);

ஈரோடு மாவட்டம் – குள்ளம்பாளையம் மற்றும் மாக்கிணாம்கோம்பை ஆகிய இடங்களில் 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்; காஞ்சிபுரம் மாவட்டம் – சோழிங்கநல்லூரில் 400/230–110 கி.வோ. துணை மின் நிலையம், பிள்ளைபாக்கம் சிப்காட்டில் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் ஸ்ரீராம் பிராப்பர்டீஸ் 110/33–11 கி.வோ துணை மின் நிலையம்; மதுரை மாவட்டம் – இடையபட்டி, கொண்டையம்பட்டி மற்றும் பனையூர் ஆகிய இடங்களில் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஜம்புநாதபுரத்தில் 230/110 கி.வோ. துணை மின் நிலையம், வாழவந்தான் கோட்டையில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம், திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் (தரம் உயர்த்துதல்) மற்றும் பண்ணாங்கொம்பில் 33/11 கி.வோ துணை மின் நிலையம்; தஞ்சாவூர் மாவட்டம் – புதூர் மற்றும் தொண்டராம்பட்டு கிழக்கு ஆகிய இடங்களில் 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்;

திருப்பூர் மாவட்டம் – அனிக்கடவில் 400/230–110 கி.வோ. துணை மின் நிலையம்; திருவாரூர் மாவட்டம் – நீலக்குடியில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம்; வேலூர் மாவட்டம் – ஜோலார்பேட்டை மற்றும் வெலக்கல்நத்தம் ஆகிய இடங்களில் 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்; அரியலூர் மாவட்டம் – ஆண்டிமடம் (தரம் உயர்த்துதல்) மற்றும் சாத்தமங்கலம் (விகிதாச்சார அறிமுகம்) ஆகிய இடங்களில் 110/33 கி.வோ துணை மின் நிலையங்கள்; தூத்துக்குடி மாவட்டம் – உடன்குடி யு.பி.சி.எல் 110/33 கி.வோ துணை மின் நிலையம் மற்றும் செட்டிக்குறிச்சி 33/11 கி.வோ துணை மின் நிலையம்; விருதுநகர் மாவட்டம் – சவாசபுரத்தில் 230/110 கி.வோ துணை மின் நிலையம், நல்லமநாயக்கன்பட்டி, வத்திராயிருப்பு மற்றும் படிக்காசுவைத்தான்பட்டி (விகிதாச்சார அறிமுகம்) ஆகிய இடங்களில் 110/33 கி.வோ துணை மின் நிலையங்கள்; திருநெல்வேலி மாவட்டம் – மூன்றடைப்பில் 33/11 கி.வோ துணை மின் நிலையம்; கரூர் மாவட்டம் – கொசூரில் 33/11 கி.வோ துணை மின் நிலையம்; கிருஷ்ணகிரி மாவட்டம் – காமன்தொட்டியில் 110/11 கி.வோ துணை மின் நிலையம்; நாமக்கல் மாவட்டம் – முசிறியில் 110/22 கி.வோ துணை மின் நிலையம்; நீலகிரி மாவட்டம் – கெரடாமட்டத்தில் 33/11 கி.வோ

துணை மின் நிலையம்; திருவண்ணாமலை மாவட்டம் – அரையாளத்தில் 110/33 கி.வோ துணை மின் நிலையம் மற்றும் மேல்மாவில் 33/11 கி.வோ துணை மின் நிலையம்;

என மொத்தம் 1122 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 45 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 20.4.2018